
மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
28.09.2022 புதன்கிழமை
supeedsam.com supeedsam@gmail.com

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

# கொழும்பில் திடீர் தீ
## 80 வீடுகள் முற்றாக எரிந்து நாசம்



தொட்டலங்கா – காஜிமாவத்த பகுதியில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் சுமார் 80 வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கஜிமாவத்தையில் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட தீ, சுமார் 2 மணி நேர போராட்டத்தை அடுத்து கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இந்த தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை, சுமார் 25 வீடுகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் அதேவேளை வீடுகளை இழந்த 220 பேர் வேறு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவுக்கும் (**Fumio Kishida**) இடையிலான சந்திப்பு இன்று (28) முற்பகல் டோக்கியோவிலுள்ள அகசகா மாளிகையில் நடைபெற்ற போது

## இக்கட்டான நிலையில் இலங்கைக்கு உதவினோம்
### ஐ.நா.வில் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டு

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நாடுகளின் கடன் நிலைமை மேலும் அதிகரிப்பது கவலைக்குரிய விடயம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்தியாவினால் இந்த ஆண்டு 3.8 பில்லியன் டொலர் இலங்கைக்கு உதவி வழங்கப்பட்டதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்தங்களின்போதும் இந்தியா அயல் நாடுகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

## திருக்கோணேஸ்வரத்தை பாதுகாக்க 120 கோடி இந்துக்களும் இணைவோம்
### தமிழக இந்து மக்கள் கட்சி அழைப்பு



திருகோணமலை சிவன் கோயில், அங்கு வசிக்கும் பூர்வக்குடி இந்து தமிழர்களை பாதுகாப்பதற்கு உலகெங்கும் இருக்கக்கூடிய 120 கோடி இந்துக்களும் ஒன்றுபட்டு செயல்படுவோம் என்று தமிழ்நாடு இந்து மக்கள் கட்சியின் நிறுவுநர் தலைவர் அர்ஜீன் சம்பத் தெரிவித்துள்ளார். அத்துடன் திருகோணமலையில் புத்தர் சிலைகளை நிறுவி சிவன் கோயிலை அழிக்க முயன்றால் குடியேற்றி இந்துக்களின் பௌத்தர்களை நம்பிக்கை வாழ்வியலைச் சிதைக்க முயன்றால் பாபர் மசூதிக்கு அயோத்தியில் என்ன

02

## குறுந்தூர்மலையில் சிங்களவர்களை குடியேற்ற போவதில்லை என்கின்றார் அமைச்சர்



முல்லைத்தீவு குறுந்தூர்மலையில் இடம்பெறும் தொடர்ச்சியான நிகழ்வுகள் தவறான புரிதலால் இடம்பெற்றதாக நம்புவதாக புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். தொல்பொருள் பிரதேசத்திற்கு சொந்தமான காணிகளே தொல்பொருள்

02

## தென்கிழக்குப் பல்கலைக்கழக 9ஆவது சர்வதேச ஆய்வரங்கு



**நூருள் /ஹுதா உமர்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் 9ஆவது சர்வதேச ஆய்வரங்கு பீடாதிபதி பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிர் தலைமையில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள, முதுநிலை விரிவுரையாளர் எச்.எம்.ஏ.

02

## பாராளுமன்றில் விசேடக் கூட்டம்

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய விசேட கூட்டமொன்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நாளை (29) நடைபெற உள்ளது. அடுத்த வாரப் பாராளுமன்ற அமர்வு தொடர்பில் தீர்மானிப்பதற்காக இக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தின்போது கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என அறிய முடிகிறது.

## இலங்கையில் இந்தியா தனது முதலீடுகளை அதிகரிக்கும்
### ஜனாதிபதியிடம் இந்திய பிரதமர் தெரிவிப்பு

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்திய பிரதமர் நரேந்திரமோடிக்கும் இடையில் டோக்கியோவில் இடம்பெற்ற சந்திப்பின்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து ஆராயப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜப்பானின் முன்னாள் பிரதமரின் இறுதிநிகழ்வின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்திய இலங்கை தலைவர்கள் மத்தியிலான சந்திப்பு பத்து நிமிடங்கள் இடம்பெற்றது என தெரிவித்துள்ள விடயமறிந்த வட்டாரங்கள் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளமைக்காக ரணில்விக்கிரமசிங்கவிற்கு பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்,இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி

02






## ஜனாதிபதியின் அவநம்பிக்கையான முயற்சி
### மீனாட்சி கங்குலி கடும் கண்டனம்



ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும் புதிய சட்டத்தை இலங்கை அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது. இந்த கடுமையான கட்டுப்பாடுகள், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கும், கருத்து தெரிவிக்கும் உரிமையை முடக்குவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

## கெஹெலியவிற்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்



அரசாங்கத்திற்கு நட்டத்தினை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட இருவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று (புதன்கிழமை) இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர், அமைச்சர் உள்ளிட்ட ஏனைய பிரதிவாதிகளையும் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன், இந்த வழக்கை நவம்பர் 03ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## திருக்கோணேஸ்வரத்தை பாதுகாக்க

நடந்ததோ, திருகோணமலையில் பௌத்த விகாரைகளுக்கும் புத்தருக்கும் நடக்கும் – என்றும் எச்சரித்துள்ளார். இராவணன் காலத்துக்கு முந்தைய 10,000 ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் பழமையான திருகோணேச்சரம் சிவன் கோயிலை முதன்முதலாக 400 ஆண்டு களுக்கு முன்னர் இடித்தனர் கத்தோலிக்கர்கள். "இராமனுக்கு அயோத்தி, இராவணனுக்கு திருகோணமலை" என்று 120 கோடி இந்துக்கள் உலகெங்கும் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையே அவர்களின் வாழ்வியல். அந்நிய ஆக்கிரமிப் பாளர்கள் அயோத்தியில் மசூதியைக் கட்டினர். 120 கோடி இந்துக்களுமாக அதை அகற்றினார்கள். தற்போது அங்கே இராமருக்குக் கோயில் கட்டுகிறார்கள்.

ஆக்கிரமிப்பாளராக பௌத்த சம யத்தவர் திருகோணமலையில் புத்தர் சிலைகளை நிறுவி சிவன் கோயிலை அழிக்க முயன்றால் – பௌத்தர்களைக் குடியேற்றி இந்துக்களின் நம்பிக்கை வாழ்வியலைச் சிதைக்க முயன்றால் பாபர் மசூதிக்கு அயோத்தியில் என்ன நடந்ததோ, திருகோணமலையில் பௌத்த விகாரைகளுக்கும் புத்தருக்கும் நடக்கும். 120 கோடி இந்துக்கள் சார்பில் பௌத்த சமய, இனவாத வெறியர்களை எச்சரிக்கிறேன். திருகோணமலை மாவட்டத்தின் பூர்வகுடிகள் இந்து தமிழர்கள் சைவர்கள் ஆவார்கள்.

இலங்கை அரசாங்கம் சிங்கள பௌத்த மதவெறி கண்ணோட்டத்தோடு இந்து தமிழர் களின் அடையாளமாக திகழும் சிவன் கோயிலை ஆக்கிரமிக்க முயற்சிப்பதும் இராவணன் வெட்டு என்பதனை பௌத்த தடயமாக மாற்ற முயற்சிப் பதும் கன்னியா வெந்நீரூற்று பகுதியில் புத்தர் சிலையை வைத்து ஆக்கிரமிக்க முயற்சிப்பதும் திருகோணமலையில் உள்ள இந்து தமிழர்களின் அடையா ளங்களை அழிக்க முயற்சிப்பதும் உட னடியாக நிறுத்த வேண்டும். இது குறித்து இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கத்திடம் எச்சரிக்க வேண்டும். சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடமும் இந்து மக்கள் கட்சி யின் சார்பில் புகார் செய்யப்படும். திருகோணமலை சிவன் கோயில் மற்றும் திருகோண மலையில் வசிக்கும் பூர்வகுடி இந்து தமிழர்களை காப்பாற்றிட உலகெங்கிலும் இருக்கக்கூடிய 120 கோடி இந்துக்களும் ஒன்றுபட்டு செயல்படுவோம் – என்று அர்ஜுன் சம்பத் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தென்கிழக்குப் பல்கலைக்கழக

ஹில்மியின் ஒருங்கிணைப்பில் 28.09.2022 (புதன்) இன்று இணைய வழியிலாகவும் நேரடியாகவும் இடம்பெற்றது. இஸ்லாமிய மற்றும் அறபுக் கற்கைகள் ஊடாக சமூக–பொருளாதார அபிவிருத்தி' எனும் தொனிப்பொருளில் இவ்வாய்வரங்கு நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாய்வரங்கின் தொடக்க நிகழ்வின் பிரதம பேச்சாளராக மலாயா பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் அகடமி துணைப் பேராசிரியர் கலாநிதி அஸ்மா அப்துர் றஹ்மான் கலந்துகொண்டு உரையாற்றினார். குறித்த ஆய்வரங்கில் 49 ஆய்வுக் கட்டுரைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது விஷேட அம்சமாகும்.

இணைய வழியிலாகவும் நேரடியாகவும் இடம்பெற்ற இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் 9ஆவது சர்வதேச ஆய்வரங்கில் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தோர்களும், பீடாதிபதிகளான பேராசிரியர் எம்.எம். பாஸில், கலாநிதி யூ.எள்.அப்துல் மஜீட் ஆகியோரும் நூலகர் எம்.எம்.றிபாவுடீன், திணைக்களத் தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வினை, ஆய்வரங்கின் செயலாளர் ஏ.ஆர்.எப். பேகம், உபசெயலாளர் எம்.எம். பாத்திமா பாஹிமா ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குறுந்தூர்மலையில் சிங்களவர்களை குடியேற்ற போதவில்லை

பிரதேசமாக பெயரிடப்படுமே தவிர அங்கு சிங்கள குடியேற்றம் நடைபெறாது என்றும் விதுர விக்கிரமநாயக்க குறிப்பிட்டுள்ளார். தற்போது முன்னெடுக்கப்படும் தொன்மை பொருட்களை பாதுகாக்கும் நடவடிக்கை எதிர்காலத்திலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். விகாரைகள் தேவாலயங்கள் சட்டம் தற்போது வரையறுக்கப்பட்டு வருவதாகவும் அது தொடர்பாக மகாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடிய பின்னர் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# அரச பணியாளர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

ஸ்தாபனச் சட்டத்தின் கீழ் உள்ள விதிகளைப் பின்பற்றாமல் சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளிப்படுத்தும் அரச பணியாளர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட புதிய சுற்றறிக்கையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாக உள்துறை அமைச்சின் செயலாளரால் இன்று இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஸ்தாபனக் குறியீட்டின் பிரிவுகளின் 6 மற்றும் 7ஆம் அத்தியாயங்களின் விதிகளைப் பின்பற்றாமல் சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளியிடும் பொது அதிகாரிகள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களிற்காக பெரும் பணத்தை செலவிட அரசாங்கம் தயாராகின்றது

நாட்டின் தற்போதைய நிலை காரணமாக மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களிற்கு நிவாரணம் வழங்குவதற்கு பதில் அமைச்சர்கள் உட்பட சுற்றுலாத்துறையை சேர்ந்தவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களிற்காக பெருமளவு பணத்தை செலவிட தயாராகின்றனர் என கர்தினால் மல்கம் ரஞ்சித் விசனம் வெளியிட்டுள்ளார். கிறிஸ்மஸ் வருகின்றது சுற்றுலாத்துறைக்குபொறுப்பான அமைச்சர் உட்பட சுற்றுலாத்துறையின் முக்கிய அதிகாரிகள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களிற்காக கொழும்பை மின்விளக்குகளால் அலங்கரிக்க திட்டமிடுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் என்ன பயன்ஏற்படப்போகின்றது என கேள்வி எழுப்பியுள்ள கர்தினால் பொக்கட்கள் காலியாகவுள்ளன,இலங்கை உலகின் ஒவ்வொரு நாட்டிடமும் உதவி கேட்கும் நாடாக மாறியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளிற்கு தீர்வை காணாமல் தலைவர்கள் சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொள்கின்றனர் ஒருவரையொருவர் குற்றம்சாட்டுகின்றனர் இதுதான் அவர்களின் பொறுப்புணர்வாஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியில் சிக்குண்டுள்ளனர் போதிய அளவு உணவும் ஊட்டச்சத்தும் இல்லாததால் மாணவர்கள் பாடசாலைகளில் நோய்வாய்படுகின்றனர் என தெரிவித்துள்ள கர்தினால் ஆனால் தலைவர்கள் மக்களின் துயரங்கள் நெருக்கடிகளை பார்க்காதவர்கள் போல நடந்துகொள்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக் கட்சி தேசிய பேரவையில் இணையாது - மைத்திரிபாலசிறிசேன

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய பேரவையில் இணையாது என அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பிரதமர் மற்றும் அமைச்சர்களை நியமிப்பதற்கு முன்னர் ஜனாதிபதி தேசிய பேரவையை நியமித்திருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இன்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கொண்டவர் தெரிவித்துள்ளார். முதலில் தேசிய பேரவையை நியமித்து அதன் பின்னர் கலந்துரையாடி உரிய நியமனங்களை செய்திருக்க வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால், அமைச்சரவையை நியமித்ததன் பின்னர் தேசிய பேரவையை ஜனாதிபதி அமைக்க உள்ளதாகவும், அதற்கு பங்களிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

# கடன்பட்ட தொழில்முனைவோருக்கு அதிகபட்ச நிவாரணம் வழங்குங்கள் - வங்கிகளிடம் அமைச்சர் கோரிக்கை

நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு வங்கிகளின் நிதி நிலைமையை பாதுகாத்து கடன் பெற்ற தொழில் முயற்சியாளர்களுக்கு அதிகபட்ச நிவாரணம் வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். பணப்புழக்கத்தைப் பாதுகாக்க வங்கிகள் வட்டி விகிதத்தை உயர்த்தியதால் சில தொழில்முனைவோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார். வங்கி முறையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் அவசியமானாலும், வர்த்தகர்களைப் பாதுகாப்பதும் மிகவும் முக்கியமானது என்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டியுள்ளார்.

# அருட்பணி எப் எக்ஸ் மேயர் அடிகளாரின் திருஉருவ சிலை திறப்பு




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயம் கட்டப்பட்டு 50 ஆண்டு பொன்விழா நிகழ்வு திருப்பலியும் ஆலயத்தினை கட்டிய இயேசு சபை துறவி அருட்பணி எப் எக்ஸ் மேயர் அடிகளாரின் திருவுருவ சிலை திறப்பு விழா மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளது. கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயம் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதிக்கு அருகில் சிறிய ஆலயமாக இருந்த காலத்தில் ஆலய திருவிழா காலங்களில் மக்களை உள்ளடக்க முடியாத நிலையில் சிறிய ஆலயமாக இருந்தமையாலும் ஆலயம் குடா பகுதியிலும் இருந்தமையாலும் மழைக்காலங்களில் மக்கள் வழிபாடுகளில் கலந்துகொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் அன்றைய கால பகுதியில் புளியடிக்குடா பங்கை பொறுப்பேற்ற இயேசு சபை துறவி அருட்பணி எப் எக்ஸ் மேயர் அடிகளாரினால் மக்களின் நலன்கருதி இந்த ஆலயம் கட்ட தீர்மானிக்கப்பட்ட போது இந்த ஆலயம் ஆற்றுக்கு அருகில் இருந்தமையால் அதனை மீன் வடிவில் அமைத்துள்ளார்கள். அமெரிக்க படவரைஞர்களின் கலைநுட்பத்தில் உலகில் எங்கும் இல்லாதவாறு இந்த ஆலயம் கட்டப்பட்டுள்ளதுடன் குறித்த ஆலயத்தினை காட்டுவதற்கு காரண கர்த்தாவாகிய இருந்த இயேசு சபை துறவி அருட்பணி எப் எக்ஸ் மேயர் அடிகளாரின் நினைவு கூறும் வகையிலேயே அடிகளாரின் திருவுருவ சிலை புனித செபஸ்தியார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கும் நிகழ்வும், 50 ஆண்டு பூர்த்தி பொன்விழா விசேட கூட்டுத்திருப்பலியும் பங்குத்தந்தை அனிஸ்டன் மொறாயஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் இயேசு சபை துறவி துறவிகள், பங்குமக்கள் பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் காட்டு யானையின் அட்டகாசம்

**சம்மாந்துறை நிருபர் ஐ.எல்.எம் நாஸிம்**

சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புளேக் ஜே மேற்கு 3 கிராம சேவையாளர் பிரிவில்அமைந்துள்ள சம்மாந்துறை அல்–உஸ்வா பிலாண்டேசன் வளாகத்தினுல் இன்று(28) அதிகாலை உள் நுழைந்த காட்டு யானை உஸ்வா பிலாண்டேசன் வாளாகத்தில் உள்ள பயன்தரும் வாழை, மரவள்ளி உள்ளிட்ட பயிர்களை சேதப்படுத்தி உள்ளதுடன் வீட்டினையும் உடைத்து சேதப்படுத்தி உள்ளது. இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக அல்–உஸ்வா பிலாண்டேசன் உரிமையாளர் இஸ்மாலெப்பை முஹம்மது முஸ்தபா மௌலவி தெரிவித்தார்.

மேலும் இம்மாதம் நான்கு தடவைக்கு மேல் காட்டுயானை வந்ததாகவும் மிகவும் கஸ்டத்திற்கு மத்தியில் நான் பயிர்ச்செய்கை செய்திருந்த தென்னை,வாழை,மரவள்ளி போன்ற மரங்களையும் முற்றாக அழித்து நாசப்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்தார்.

அது மாத்திரமில்லாமல் இப் பிரதேசத்தில் ஏற்கனவே இக் குறித்த காட்டு யானை ஒன்றுதான் இரவு வேளைகளில் நடமாடித்திருவதாகவும் இப் பிரதேசத்தில் வாழ்ந்த ஒருவரை அண்மையில் தாக்கி அவர் உயிரிழந்ததாகவும் மேலும் தெரிவித்தார். ஆகவே இவ்வாறு மனிதர்களுடைய உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து விளைவித்துக்கொண்டு இருக்கின்ற இந்த காட்டுயானையை இப் பிரதேசத்தில் இருந்து தூரப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்றும் அவர் தனது உரையில் கேட்டுக்கொண்டார்.

# அரச உத்தியோகத்தர்கள் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் பெறுவது தொடர்பில் விளக்கமளிப்பு



**நூருள் /ஹுதா உமர்**

தொழில் பயிற்சி அதிகாரசபை காரைதீவு பயிற்சி நிலையத்தினால் முன் கற்றல் அங்கீகாரம முறையினூடாக தேசிய தொழில் தகைமை தரம் 4 சான்றிதழ் எவ்வாறு பெறுவது என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு காரைதீவுப் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது அதிகாரிகளினால் சான்றிதழை பெற தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி நெறியை கற்று கொண்டிருப்பவர்கள் (6 மாதமாக), தொழில் செய்து கொண்டிருப்பவர்கள், வியாபாரத்தை பதிவு செய்து நேரடியாக தொழிலில் ஈடுபடுபவர், 11ஃ2 வருட அனுபவம் தொடர்ச்சியாக இருப்பவர்கள், வெளிநாடு சென்று வந்தவர்களுக்கு வாய்ப்பும், திறமையும் அதிகம் போன்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. அதே போன்று ழடெைநெ மூலம் எப்படி விண்ணப்பிக்க முடியும், 7 நாட்களுக்குள் சான்றிதழ் வழங்கப்படும் விடயம், போலிச் சான்றிதழ் எடுக்க முடியாத தன்மை, தனிநபருக்கு சான்றிதழ் எடுக்க முன்பு 25000 ரூபாய் செலவானது ஆனால் தற்போது ஜனாதிபதி நிதியத்தால் இலவசமாக வழங்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் விளக்கி திறமையுள்ளவர்கள் மாதக்கணக்கில் தொழிலை வருமானத்தை விட்டு 6 மாதங்கள் முழு நேர பயிற்சி பெற வேண்டியதில்லை 3 மணித்தியாலங்கள் மட்டும் பரீட்சைக்கு செலவிட்டால் போதும் போன்ற விடயங்கள் இந்த நிகழ்வில் எடுத்துக் காட்டப்பட்டது. நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன் உட்பட அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

### பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டல்

# தம்புள்ளை, மாத்தளையில் முன்னெடுப்பு





பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்துதிரட்டும்நடவடிக்கைநேற்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய நேற்றைய தினம்(27) பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை தம்புள்ளை, மாத்தளையில் மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரா.சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டைவரையில்கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

### பாடசாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்க நகை

# உரிய ஆசிரியையிடம் ஒப்படைப்பு

**அஸ்ஹர் இப்றாஹிம்**



கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் கல்வி பயிலும் தரம் 09 சீ பிரிவை சேர்ந்த மாணவர்களான என்.எம்.சப்ரின் , கே.கைப் சக்கி மற்றும் ஏ.எம்.எம்.அஸ்ஜத் ஆகிய மூன்று மாணவர்களும் சுமார் இரண்டு இலட்சத்து எண்பதினாயிரம் (2,80,000) ரூபாய் பெறுமதி மிக்க தங்க கைப்பட்டி ஒன்றை கண்டெடுத்த கல்லூரி நிர்வாகத்திடம் ஒப்படைத்த நிகழ்வொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இத் தங்க கைப்பட்டியானது இக் கல்லூரி ஆசிரியை ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த மூன்று மாணவர்களும் இது விடயமாக உரையாடி தரம் 09 பகுதித் தலைவர் எம்.எஸ்.ஏ.சிராஜ் ஆசிரியரிடம் ஒப்படைத்துள்ளனர். இவ் மாணவர்களது நன்நெறி மிக்க முன்மாதிரி நடத்தையினை கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் உள்ளிட்ட பாடசாலை சமூகம் பாராட்டியதுடன் , பகுதி காலைக் கூட்டத்தில் குறித்த ஆசிரியையிடம் அந்த தங்க நகை ஒப்படைக்கப்பட்டது.

# அக்கரைப்பற்றில் இளம் எழுத்தாளர்களின் மேம்பாட்டு கூடல் நிகழ்வு






**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இளம் எழுத்தாளர்களுக்கான மேம்பாட்டுக் கூடல் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்றது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்சனின் மேற்பார்வையின் கீழ், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல் தௌபீக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் வளவாளராக எழுத்தாளரும், பேஜஸ் புத்தக இல்லத்தின் அதிபருமான சிராஜ் மஷ்/ஹர் கலந்து கொண்டதோடு, அக்கரைப்பற்று கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். தௌபீக், அக்கரைப்பற்று கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவப்பிரியா, ஆலையடிவேம்பு கலாசார உத்தியோகத்தர் ஜௌபர், முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.எம் முத்தார் மற்றும் இளம் எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்கள் தங்களது பேனாவை முரண்பாடு ஏற்படாமல் எவ்வாறு பயன்படுத்த வேண்டும். அதனை எப்படிப் பயன்படுத்தலாம். எழுதும் போது கையாள வேண்டிய முறைமைகள் மற்றும் நுணுக்கங்கள், எழுதுவதில் உள்ள தாற்பரியங்கள் போன்ற பலதரப்பட்ட விடயங்களையும் வளவாளராகக் கலந்து கொண்ட சிராஜ் மஷ்/ஹர் மிகத் தெளிவாக விளங்கப்படுத்தினார். அத்தோடு, செயற்பாட்டு ரீதியாகவும் இளம் எழுத்தாளர்கள் எழுப்பிய பல்வேறு சந்தேகங்களுக்கும் தெளிவை வழங்கினார்.

# திருகோணமலையில் நவீன சீதை சிறுகதை நூல் வெளியீட்டு விழா




**(அ . அச்சுதன்)**

கவிச்சுடர் சிவரமணியின் நவீன சீதை சிறுகதை நூல் வெளியீட்டு விழா 03-10-2022 திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வின் முதன்மை அதிதியாக சேனையூர் அனாமிகா களரி பண்பாட்டுமையத்தின் நிறுவனர் பேராசிரியர் பால சுகுமார் அவர்களும், சிறப்பு அதிதியாக திருகோணமலை வலயக்கல்விப்பணிப்பாளர் சி. சிறிதரன் அவர்களும் கௌரவ அதிதியாக மூலோபாயக்கற்கை நிலையத்தின் பணிப்பாளர் ஆ. யதீந்திரா அவர்களும் கலந்து சிறப்பிக்கின்றனர். தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பம் ஆகும் நிகழ்வில் வரவேற்புரையை ஊடகவியலாளர் பாலேந்திரலிங்கம் விபூஷதன் வழங்க நூல் பிரதியை இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் முகாமையாளர் நூல் ஆசிரியரிடம் இருந்து நூலைப் பெற்று வெளியீட்டு வைப்பார். நூலின் அறிமுக உரையை கவிஞர் க . யோகானந்தன் வழங்க நயவுரையை ஆசிரியை சௌ. சந்திரகலா வழங்குவார். நன்றியுரையை திருகோணமலை பொது நூலகத்தின் பிரதம நூலகர் க. வரதகுமார் நிகழ்த்த நிகழ்ச்சித் தொகுப்பை ஊடகவியலாளர் முகமட் புகாரி வழங்குவார்.

# தேசிய மட்ட போட்டிக்கு பட்டிருப்பு மகிழூர் சரஸ்வதி வித்தியாலய மாணவன் தெரிவு

**அஸ்ஹர் இப்றாஹிம்**

பட்டிருப்பு மகிழூர் சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் இருந்து இலக்கியத் திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்ட செல்வன் எஸ்.அஜந்தன் கிழக்கு மாகாண மட்ட தமிழ்மொழித்தின போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் மாகாண மட்டம் ஆகியவற்றில் தொடர்ச்சியாக முதலிடம் பெற்று தேசியமட்டத்தில் போட்டியிடும் தகுதியைப்பெற்றுள்ளார்.

# நிறை குறைந்த குழந்தைகள் ஓகஸ்டில் அதிகரிப்பு

ஐந்து வயதுக்கு குறைந்த குழந்தைகளில், நிறை குறைந்த அதிகமான குழந்தைகள் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. நாடுபூராகவுமுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என ஊட்டச்சத்து விசேட வைத்தியர் கௌசல்யா கஸ்தூரிஆராச்சி தெரிவித்துள்ளார். கர்ப்பிணிகளின் உடல் நிறை குறியீட்டின் படி இந்த வருடத்தின் ஓகஸ்ட் மாதம் வரை 18.5 சதவீதத்துக்கு குறைவான தாய்மார்களுள் 15 சதவீதமானவர்கள் உரிய நிறை குறியீட்டை பூரணப்படுத்த முடியாதவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றார்.

# புதிய சமுர்த்திக் கிளை புது மனை புகு விழா நிகழ்வு



**ஹஸ்பர்**

திருகோணமலை ,தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் சமுர்த்திக் கிளையின் கிரக பிரவேச (புது மனை புகு விழா) இன்று (28) பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு சொந்தமான கட்டிடத்தில் இருந்து அருகாமையில் உள்ள கட்டிடத்துக்கு செல்வதற்கான சுப நேரப்படி சமய அனுஷ்டானங்களுடன் குறித்த அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம கலந்து கொண்டதுடன் இடம்மாற்றம் பெற்றுச் செல்லும் கட்டிட வளாகத்தை பார்வையிட்டனர் . மக்களுக்கு வினைத் திறனான சேவையை விரைவாக வழங்கும் நோக்கில் இக் கட்டிடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இதில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.






# கிழக்கு மாகாண தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழா





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

2022ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண தமிழ் மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழா மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றுள்ளது. அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளனர். மாற்றுத்திறனாளிகளை மீண்டும் மீண்டும் பேசுபொருளாக்கி, அவர்களின் வாழ்வில் நல்ல மாற்றங்களை உருவாக்க வேண்டுமென்பது இந்த மாற்றுத்திறனாளிகள் விளையாட்டின் நோக்கமாகும். அதேவேளை இந்த விளையாட்டில் பங்குபெறும் விளையாட்டு வீரர்கள் தேசிய அளவில் நடைபெறும் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு விழாவில் பங்குபற்றி வெற்றி ஈட்டுவதற்கு ஊக்கமளிப்பதாக இருக்கிறது.

இதன்போது மட்டக்களப்பு சிவானந்தா மைதானத்தில் உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்துக்கும் யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற சத்தப்பந்து கிரிக்கட் போட்டியில் உதயம் விழிப்புலனற்றோர் அணி வெற்றி ஈட்டியது. ஒவ்வொரு தடவையும் வுயஅடைீயசய தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழா நடைபெறுகின்ற போதும் விஷேட நிகழ்வாக சத்தப்பந்து கிரிக்கட் போட்டி நடைபெறுவதோடு, இந்தப் போட்டியில் பங்குபற்றும் வீரர்களில் சிலர் இலங்கையின் தேசிய சத்தப்பந்து கிரிக்கட் போட்டியில் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

இந்த விளையாட்டில் சிறப்பு விருந்தினராக இலங்கை தேசிய சத்தப்பந்து கிரிக்கட் போட்டிக் குழுவின் செயலாளர் அழைக்கப்பட்டிருந்தார். அவர் நிகழ்வில் பேசும் போது,

இவ்வாறான போட்டிகளில் பல சத்தப்பந்து கிரிக்கட் வீரர்களை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகவும், அவர்கள் தேசிய அணியில் போட்டியின் அடைப்படையில் தெரிவு செய்வதற்கு தாங்கள் ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டார். இரண்டாம் நாள் இறுதிப்போட்டிகள் ஒலிம்பிக் சுடர் ஏற்றப்பட்டதனைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. இன்றைய தினம் சக்கர நாற்காலி ஓட்டம், அஞ்சல் ஓட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் போன்ற போட்டிகளின் இறுதிப்போட்டிகள் நடைபெற்றன.

விளையாட்டுப்போட்டியின் இறுதி நிகழ்வாக வெற்றியீட்டிய வீரர்களுக்கு அதிதிகளினால் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இறுதிநாள் நிகழ்வுகளிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், வெற்றியீட்டிய வீரர்களை பாராட்டியதுடன் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்துள்ளார். மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் மற்றும் னுயுவுயு அமைப்பு என்பன இணைந்து நடாத்திய தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழா கோலாகலமான நிறைவு நாள் நிகழ்வுகளோடு நிறைவுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுத்து நிறுத்துவது யார்?



மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்ணளவாக இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயக் காணிகளில் மேட்டு நிலப் பயிர் செய்கை, வேளாண்மைச் செய்கை, செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. இதில் மானிய அடிப்படையில் உரம் வழங்குவதற்காக விவசாயச் செய்கைக்கென ஒரு இலட்சத்தி முப்பத்தையாயிரம் ஏக்கரும், மானியம் அல்லாத அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கரும், விவசாயச் செய்கைக்கென பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஓன்பதாயிரத்தி ஐநூறு மெற்றிக்தொண்ணுக்கு மேற்பட்ட யூரியா உரம் மாவட்டத்திற்குத் தேவையான நிலையில் மானிய அடிப்படையிலும், ஏனைய மானியம் அல்லாத அடிப்படையிலும் யூரியா உரமும் தேவையாகும். ஆனால் அரசைப் பொறுத்தவரையில் மானிய அடிப்படையிலான உரத்தை குறைந்தளவில் மாவட்டத்திற்கு அனுப்பி உரத்தட்டுப் பாட்டை விவசாயிகளுக்கு ஏற்படுத்தி அரசுக்குள் உள்ள ஒரு சில அரசியல் வாதிகள் கப்பம் பெற்று மாவட்டத்திலுள்ள வியாபாரிகளும் குறிப்பிட்ட இலாபத்தை வைத்து அதிக விலையில் யூரியா உரத்தை விற்பதற்கான முயற்சியில் ஆரம்பித்துள்ளனர்.

இதனால் மாவட்டத்தில் அதிக விளைச்சல் பெறாத விவசாயக்காணி உரிமையாளர்களும், பணம் கொடுத்து வாங்க முடியாத விவசாயிகளும் நேரடியாக இதில் பாதிக்கப்படுவதோடு, வளம் உள்ள விவசாயிகளும் அதிக விலை கொடுத்து உரத்ததைப் பெற்று இலாபம் இல்லாமல் நட்டம் அடையக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. அரசும்,வெளிநாடுகளும் விவசாயிகளுக்கென உரத்தைப் பெறுவதற்கு பல கோடிக் கணக்கான நிதிகளை ஓதுக்கீடு செய்து அண்ணளவாக ஐம்பது கிலோ உரத்திற்கு ரூபாய் இருபத்தையாயிரம் பணத்தைக் கொடுத்து உரத்தைப் பெற்று விவசாயிகளுக்கு ரூபா பத்தாயிரம் மானிய அடிப்படையில் உரத்தை வழங்கி அண்ணளவாக ஒரு மூடைக்கு ரூபாய் பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்ட நிதியை அரசு மானியமாக வழங்குவதாக பேசப்படுகின்றன.

அப்படி வழங்கப்படுகின்ற உரத்தை அரசுக்குள் இருக்கின்ற ஊழல்வாதிகள் தவறான முறையில் மோசடி செய்து அதிக விலைக்கு உரத்தை விற்பனை செய்து விவசாயிகளுக்கு பல நட்டத்தை ஏற்படுத்தி குறிப்பாக கடந்த இரண்டு போகங்களிலும் அதிக நட்டத்தை ஏற்படுத்தி இந்தப் போகத்திலும் நட்டத்தை ஏற்படுத்துவதற்காக உர விற்பனையில் மோசடி வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. வேலியே பயிரை மேய்கின்றளவிற்கு ஊழல்கள் யூரியாஉர விற்பனையில் நடைபெற்று வருவதை விவசாயிகளால் கட்டுப்படுத்த முடியாமலும் நேர்மையான அதிகாரிகளும் கவலையுடன் மௌனம் காக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே விவசாயிகளும். விவசாய நலன் விரும்பிகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் யூரியா கிருமி நாசினி தொடர்பாக ஏற்படப் போகும் நட்டத்தைக் குறைப்பதற்கு நடைமுறையிலுள்ள விவசாய அமைப்புக்கள், திட்டமிடல் முகாமைத்துவக் குழு செயற்பாட்டாளர்கள் கடந்த சில மாதங்களாக விவசாயிகளின் நலன்கள் தொடர்பாக சொந்தப் பணத்தை செலவு செய்து மிக அற்பணிப்புடனும், நேர்மையுடனும் செயற்பட்டு விவசாயிகளின் பிரச்சினைகளை அதிகாரிகள், மாவட்ட மக்கள் பிரதிநிதிகள்,எதிர் கட்சி, ஆளும் கட்சி அமைச்சர்கள், வெளிநாட்டத்தூதுவர்கள், பத்திரிகையாளர்கள், ஜனாதிபதி செயலகம் வரையும் கொண்டு சென்று கடினமாக உழைத்தமைக்காக அனைவரின் பாராட்டுக்களையும், நன்றிகளையும் இப் பிரதிநிதிகள் பெற்ற நிலையில் ஏற்படப் போகும் விவசாய நட்டத்தை எப்படி தடுக்க முடியும். என்பதோடு வேளாண்மைச் செய்கை இந்தப் போகம் செய்கை பண்ணப்படவும் வேண்டும். நட்டம் ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளின் நிலை என்ன? என மு.கிழக்கு மாகாணசபை உறுப்பினர், ஈபிஆர்.எல்.எப்–ப.ம, இரா.துரைரெத்தினம் கேள்வி எழுப்பியுள்ளார்.



# ஆங்கில தின நிகழ்வும், வாசிப்பு மூலை தொகுதி திறப்பு விழாவும்




(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் ஆங்கில தின நிகழ்வும், வாசிப்பு மூலை தொகுதி திறப்பு நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (27) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.அஜ்மீர், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய ஆங்கிலப்பாட வளவாளர் எம்.ஐ.சித்தீக், ஆசிரிய ஆலோசகர்களான எஸ்.எம்.கடாபி, எச்.எம்.ஆதம் லெப்பை மற்றும் வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர், வை.அஹமட் வித்தியாலய அதிபர் யூ.எல்.எம்.ஹரீஸ், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ்.ஐ.எம்.பஸீல் ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவிகளின் கலை, கலாசார நிகழ்வுகளுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், கோட்டமட்ட ஆங்கில தின போட்டியில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# சிறுவர்கள் தொடர்பான அத்தனை பிரச்சினைகளும் நிறைந்த ஒரு இடமாக வெருகல் பிரதேசம்

**பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் ஆதங்கம்**




(ரக்ஸனா)

சிறுவர்கள் தொடர்பான அத்தனை பிரச்சினைகளும் நிறைந்த ஒரு இடமாக வெருகல் பிரதேச செயலாளர் பிரிவு காணப்படுவது வருத்தமளிப்பதாக பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் ஆதங்கம் வெளியிட்டார். இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் நலிவுற்ற பெண்கள் சிறுவர்கள் தொடர்பான சமூக அபிவிருத்தித் திட்டம் எனும் நிகழ்ச்சி அமுலாக்கத் திட்டத்தின் பிரதேச மட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் வெருகல் பிரதேச செயலகத்தில் புதன்கிழமை 28.09.2022 இடம்பெற்றபோது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

பிரதேச பொதுமக்கள், சிறுவர் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பெண்கள், இளைஞர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸார், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர் அனஸ்,

சிறுவர்கள் தொடர்பாக குறிப்பிடப்படுகின்ற பிரச்சினைகள், உரிமை மீறல்கள், துஷ்பிரயோக செயற்பாடுகள், இவ்வாறு என்னென்னவெல்லாம் சுற்றுநிருபங்களிலே, அறிக்கைகளிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ அவை அனைத்தும் காணப்படுகின்ற ஒரு பிரதேசமாக வெருகல் பிரதேச செயலாளர் பிரிவு இருக்கின்றது. இதற்கு தீர்வு காணுமும் பொருட்டு இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம் உட்பட இன்னும் ஆர்வமுள்ளோர் செயற்பட்டு வருகின்றார்கள். அவர்களுக்கு பிரதேச மக்கள் சார்பாக நான் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பிரதேச செயலக அதிகாரிகளோ நிறுவனங்களோ கிராம மக்களோ தனித்தனியே இயங்கி இந்தப் பிரச்சினைக்குத் திர்வு காண முடியாதென்பதை நாம் எல்லோரும் விளங்கிக் கொள்ள வேண்டும். குறிப்பாக சிறுவர் விவகாரங்களொடு நேரடியாகத் தொடர்புடைய திணைக்கள்கள் இந்த விடயத்தில் மிகுந்த அக்கறை எடுக்க வேண்டும். அவர்களை இந்த கலந்தோலோசனைக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்து உள்வாங்கியிருக்கின்ற போதிலும் அவர்களது போதிய பங்களிப்பு கிடைப்பதில்லை. குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனையின் பங்களிப்பு மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்." என்றார்.

இந்நிகழ்வில் ஈச்சிலம்பற்று பொலிஸ் பொறுப்பதிகாரி லக்மல் பாலசூரிய, இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ரீ. திலீப்குமார், சிறுவர் நன்னடத்தை மூதூர் அலுவலக பொறுப்பதிகார் ஐ. அருள்செல்வன், பிரதேச செயலக முகாமைத்துவ சேவைகள் அலுவலர் எஸ். பிறியங்கா, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ். அருட் செல்வம் உட்பட இன்னும் பல அதிகாரிகளும் அலுவலர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் சிறுவர்கள், பெண்கள் தொடர்பானதும் மற்றும் பல்வேறு சமூகச் சீரழிவுகள் தொடர்பானதுமான பிரச்சினைகள் கவனத்தில் கொண்டு வரப்பட்டு அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும் பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டன.

# பரதநாட்டியத்துடன் இடம் பெற்ற துர்க்கா பூஜை

(வி.ரி. சகாதேவராஜா)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகமும் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்தும் நவராத்திரி விழாவின் துர்க்கா நிகழ்வானது இரண்டாவது நாள் நிகழ்வு பணிமன்றதலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (27) மாலை இடம்பெற்றது. நிகழ்வுகளாக பஜனை, ஒங்காரம்,பஜனை, அஸ்ரோத்திரம்,பூசை இடம்பெற்றது. பாலையடி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகளாக பேச்சு, கதாப்பிரசங்கம், பரதநாட்டியம் சிறப்பு சொற்பொழிவு களும் சுவாமி விபுலாநந்தர் கற்கைகள் நிறுவகத்தின் மாணவிகளின் பரதநாட்டியம் என்பன இடம்பெற்றது. பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார். இந்நிகழ்வில் இந்து கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனின் வழிகாட்டலில் இடம்பெற்றது. ஏற்பாடுகளை மாவட்ட இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார். நிகழ்ச்சிகளை கலாச்சார உத்தியோகத்தர் என்.பிரதாப் தொகுத்து வழங்கினார்.




# ஆண் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் பெரும் வீழ்ச்சி

( காரை சகா)

அண்மையில் வெளியான 2021(22) உயர் தர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பாடசாலை மாணவர்களில் 35.12வீ ஆண் மாணவர்களும்,64.88வீ மாணவிகளும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகைமை பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். ஆண்பிள்ளைகளின் பரீட்சை பெறுபேறுகள் வீழ்ச்சி அடைந்து வருவது குறித்து பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. கையடக்க தொலைபேசி, மோட்டார் சைக்கிள் ஆகிய இரண்டும் ஆண் மாணவரின் கல்வியில் பாரிய தாக்கத்தை சமகாலத்தில் ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகிறது.போதைப்பொருள் பாவனை அடுத்ததாக செல்வாக்கு செலுத்துவதாக கூறப்படுகிறது.

ஆண்கள் பாடசாலைகளின் பெறுபேறுகள், பெண்கள் பாடசாலைகளை விட மிகவும் குறைவாக உள்ளது. இதனால் ஆண்கள் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. தற்போது அரச ஊழியர்களில் கணிசமானோர் பெண்களாக இருப்பதோடு, ஆசிரியர் சேவையில் ஏறத்தாழ 74.4வீ பெண்களாகவும், 26.6வீ ஆண்களாகவும் இருக்கின்றனர். இதற்கு பிரதான காரணம் ஆண்கள் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு தேர்வு செய்யப்படும் எண்ணிக்கை குறைவாக இருப்பதோடு, பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் தொகையும் குறைவாக உள்ளது. இந்த நிலைமைக்கு ஆண்கள் பொதுப் பரீட்சைகளில் சித்தி அடையும் வீதம் குறைவடைந்து வருகின்றமையே மறைமுகமான காரணமாகும்! மேற்படி நிலைமைகளுக்கு பிரதான காரணங்களில் சில..

1) ஆண் மாணவர்கள் பாடசாலை கல்வியில் போதியளவு அக்கறை செலுத்துவதில்லை.
2)சிறுவயதிலேயே போதைப்பொருள் போன்ற துர்நடத்தைகளுக்கு அடிமையாதல்.
3)பெற்றோர்கள் தாய்மார்கள் ஆண்பிள்ளைகளுக்கு அதிகளவு சலுகைகள் வழங்குதல்.
4)தாய்மார்கள் ஆண்பிள்ளைகள் செய்யும் தவறுகளை தந்தையாருக்கு தெரிவிக்காமல் மூடி மறைத்தல்.
5) பாடசாலைகளில் பதின்ம வயது ஆண் பிள்ளைகளுக்கு சிறந்த ஆலோசனை வழிகாட்டல் வழங்குதலில் அக்கறை இல்லாமை.
6) ஒப்பீட்டளவில் ஆண் மாணவர்கள் பெண் மாணவர்கள் விட கட்டுப்பாடுகளை மீறி, பயமின்றி ஒழுங்கற்ற நடத்தைகளில் ஈடுபடுதல்.
7) ஆண் மாணவர்களில் பலர் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பதை விட, பெண் மாணவிகளை தன்வசப்படுத்தும் செயற்பாடுகளுக்கு அதிகளவு நேரத்தை செலவிடுதல். இவை போன்ற பல்வேறு காரணங்களை முன் வைத்தாலும், உண்மையான காரணத்தை கண்டறிய பொருத்தமான ஆய்வுகளை ஒவ்வொரு ஆண்கள் பாடசாலையும் மேற்கொள்ள வேண்டும் என ஒரு அதிபர் வேண்டிகொள்கிறார்.

# ஆங்கிலம் தமிழ் மொழி பெயர்ப்பாளராக பிறேம் சம்சன் லோகு சத்திய பிரமாணம்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் பேசாலை 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.பிறேம் சம்சன் லோகு திங்கள் கிழமை (26.09.2022) மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி அப்துல் சமட் கிப்துல்லா முன்னிலையில் ஆங்கிலம் தமிழ் பொழி பெயர்ப்பாளராக சத்திய பிரமாணம் செய்து கொண்டார். இவர் பேசாலையைச் சேர்ந்த திரு திருமதி ஆரோக்கியம் லோகு எலிசபேத் குரூஸ் தம்பதினரின் ஏக புத்திரனுமாவார். அத்துடன் இவர் பேசாலை சென்.பற்றிமா தேசிய பாடசாலையின் பழைய மாணவரும் தற்பொழுது மன்.தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் ஆங்கில ஆசிரியராகவும் திகழ்ந்து வருகின்றார். இப் பகுதியில் ஊத்தியோக பூர்வமான மொழி பெயர்ப்பாளர்கள் தட்டுப்பாடாக இருக்கும் இவ்வேளையில் ஆங்கிலம் தமிழ் பொழி பெயர்ப்பாளராக இவர் உருவாகி இருப்பதை பலரும் இவரை பாராட்டுகின்றனர்.

# 1497 வது மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு தாறுஸ்ஸபாவில் கொடியேற்றம்



நூருள் /ஹுதா உமர்.

முஹம்மது நபிகள் நாயகம் ஸல்லள்ளா/ஹ அலைஹி வ ஆலிஹி வ சஹ்பிஹி வசல்லம் அன்னவர்களின் 1497வது மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு கல்முனை தாறுஸ்ஸபா அமைய தலைமையகத்தில் அமையத்தின் தவிசாளர் மௌலவி ஏ.ஆர். சபா முஹம்மத் (நஜாஹி) அவர்களின் தலைமையில் ஹிஜ்ரி 1444 – 2022. 09.26 அன்று புனித கொடியேற்றம் மிக சிறப்பாக இடம்பெற்றது.

மௌலவிமார்களின் மௌலித் முழக்கத்துடன் நிகழ்வின் பிரதம அதிதி அஸ்ஸெய்யித் மக்கத்தார் அப்துல் மஜீத் கலீபத்துல் ஹல்லாஜ் அவர்களினதும், நிகழ்வில் கலந்து கொண்ட உலமாக்கள், கல்விமான்கள், பிரதேச முக்கியஸ்தர்களினதும் பங்குபற்றலுடன் புனித கொடி ஏற்றி வைக்கப்பட்டது. ஹிஜ்ரி 1444 றபீஉனில் அவ்வல் தலைப்பிறை 2022.09.27 செவ்வாய்கிழமை முதல் 2022.10.08 சனிக்கிழமை வரை தொடர்ச்சியாக 12 நாட்கள் மௌலித் பயான் நிகழ்வுகள் இடம்பெறுவதோடு தாறுஸ்ஸபா குர்ஆன் மத்ரஸா மாணவர்களின் நிகழ்ச்சிகளும், கல்முனை பாத்திமதுஸ் ஸஹ்றாஃ மகளிர் கல்லூரியின் நிகழ்வுகளும் இடம்பெறும். இறுதித் தினமான 2022.10.09 ஞாயிற்றுக்கிழமை அன்று மீலாதுன் நபி விழா மிக சிறப்பாக தாறுஸ்ஸபா தலைமையகத்தில் இடம்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாநகர சபையின் புனித அந்தோனியார் சிற்றாலயத்தின் வருடாந்த திருவிழா





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாநகர சபையின் புனித அந்தோனியார் சிற்றாலயத்தின் வருடாந்த திருவிழா நேற்றைய தினம் (27) சிறப்பாக நடைபெற்றது. புனித அந்தோனியார் ஆலயத்தின் திருப்பலியானது காலை 10.30 மணிக்கு அருட்பணி டி.எப்.லோரன்ஸ் அடிகளாரினால் ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் அதனை தொடர்ந்து திருப்பலியில் கலந்து கொண்டவர்களுக்கு மாநகர சபையின் பணியாளர்களால் அன்னதானமும் வழங்கப்பட்டு ஆலய திருவிழா இனிதாக நிறைவு பெற்றது .இவ்விழாவில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், மாநகர சபையின் உறுப்பினர்கள், மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராஜா உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.